கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 29.06.2026 திங்கட்கிழமை இதழ் : 174 பக்கங்கள் : 08




# செம்மணிப் பகுதியில் நடக்கும் போராட்டம் தேவையற்ற ஒன்று!

## உரிய நீதியை நாங்கள் வழங்குவோம் உறுதியளிக்கிறார் கடற்றொழில் அமைச்சர்



மட்டக்களப்பு, ஜூன். 29

"செம்மணிப் பகுதியில் முன்னெடுக்கப்படும் போராட்டம் தேவையில்லாத போராட்டம். ஏனென்றால் நீங்கள் போராட வேண்டியதில்லை, நீங்கள் போராடுகின்றது எதற்காக என்றால் வேறொன்றுமல்ல, 1990ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட படுகொலைகளுக்குத்தான்."

- இவ்வாறு தெரிவித்தார் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்.

செம்மணிக்கான நீதியை நாங்கள் வழங்குவோம் என்றும் உறுதியளிக்கின்றேன் என அவர் குறிப்பிட்டார்.


நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் நடைபெற்ற டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட 35 பயனாளிகளுக்கு 10 மில்லியன் ரூபா பெறுமதியான நஷ்ட ஈடு தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 4 பயனாளிகளுக்கு 4.5 இலட்சம் ரூபாய் வீதமும் பாதிக்கப்பட்ட 31 கடற்றொழிலாளர்களுக்கு இரண்டரை லட்சம் ரூபாய் வீதமும் நட்டஈடு தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

07

# தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார் நயினை அம்மன்



யாழ்ப்பாணம், ஜூன். 29

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர் திருவிழா நேற்று பக்தி பூர்வமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற வசந்த மண்டப பூசைகளைத் தொடர்ந்து, நாகபூசணி அம்பாள், விநாயகப் பெருமான் மற்றும் வள்ளி-தெய்வானையுடன் முருகப் பெருமான் உள்வீதியில்

07

# வெளிநாடுகளில் வசித்துவரும் இலங்கையருக்கு வாக்குரிமை

## அரசாங்கம் தீவிர பரிசீலனை

கொழும்பு, ஜூன். 29

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளுக்கு வாக்குரிமை வழங்குவதற்கான முறையான பொறிமுறையை உருவாக்குவது குறித்தும், மாகாண சபை தேர்தல்களை நடத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையே பல்வேறு கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் வாக்களிப்பதை உறுதிசெய்வது

07

# அரசியல் பழிவாங்கலில் ஈடுபடும் அரசு விரைவில் வீட்டுக்கு செல்லும்!

## சாகர காரியவசம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 29


அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு, நாட்டு மக்களால் மிக விரைவில் வீட்டுக்கு விரட்டியடிக்கப்படும் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

தற்போதைய அரசு நாட்டு மக்களின்

07

# கடுமையான வெப்ப அலை; பிரான்ஸில் 1,000 பேர் பலி!



பாரிஸ், ஜூன். 29

ஐரோப்பிய நாடுகள் முழுவதும் வரலாறு காணாத வகையில் வீசி வரும் கடுமையான வெப்ப அலை காரணமாகப் பிரான்ஸில் மட்டும் இது வரை

07

# செம்மணி கொடூரங்களுக்கு நீதி கோரி நேற்று "உரிமைப்பந்தம்" மக்கள் எழுச்சி!



யாழ்ப்பாணம், ஜூன். 29

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நிகழ்த்தப்பட்ட கொடூரங்களுக்கு நீதி கோரி, 'உரிமைப்பந்தம்' என்ற தொனிப்பொருளில் அமைதி வழி மக்கள் எழுச்சிப் போராட்டம்

07

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அதிநவீன வசதிகளுடன் 3 மாடிக் கட்டடம்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 29

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கான புதிய மூன்று மாடி கட்டடத்தை கட்டி அடுத்த ஆண்டு இறுதிக்குள் கையளிப்பதாகவும், புதிய கட்டடம் கையளிக்கப்படும்போது, புதிய மருத்துவ உபகரணங்களும், போதிய பணியாளர்களும் வழங்கப்படும் எனவும் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதியளித்துள்ளார்

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை விஜயம் செய்த சுகாதார அமைச்சர், தெல்லிப்பழை வைத்தியசாலையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

# இலங்கை இளைஞர் இந்தியாவில் கைது!

புதுடில்லி, ஜூன். 29

போலி கனடா கடவுச்சீட்டைப் பயன்படுத்தி லண்டன் செல்ல முயன்ற இலங்கை இளைஞன் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெங்களூர் கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்தில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

குறித்த இலங்கையர் போலி கனேடிய கடவுச்சீட்டு மற்றும் போலியான குடியேற்ற ஆவணங்களைப் பயன்படுத்தி லண்டன் செல்லும்

07

# சபாநாயகருக்கு எதிராக மிகவிரைவில் பிரேரணை!

கொழும்பு, ஜூன். 29

பாராளுமன்ற சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக மிக விரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்குத் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற எதிர்க்கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

07

# மட்டு. புதுப்பாலம் உடைந்து வீழ்ந்தது!



மட்டக்களப்பு, ஜூன். 29

மட்டக்களப்பு நகருக்குள் நுழையும் பிரதான பாலங்களில் ஒன்றான புதுப்பாலம் நேற்று மாலை உடைந்து வீழ்ந்தமையினால் அப்பகுதியூடான

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆண்டுக்குள் 13,600 தாதியர்களை சேவையில் இணைக்க நடவடிக்கை

## யாழ்.வந்த சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 29

5ஆண்டு கால பகுதிக்குள் 13ஆயிரத்து 600 தாதியர்களை சேவையில் இணைப்பதை இலக்காகக் கொண்டு செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை விஜயம் செய்த சுகாதார அமைச்சர், தெல்லிப்பழை வைத்தியசாலையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 14 மாதங்களில் மட்டும் நாங்கள் சுமார் 5,000 தாதியர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளோம். ஆனால், எல்லா இடங்களிலிருந்தும் வரும் ஒரே முறைப்பாடு என்னவென்றால், "தாதியர்கள் போதுமானதாக இல்லை" என்பதுதான்.

நாங்கள் அவர்களை எங்களது அமைச்சிலோ அல்லது வீடுகளிலோ வைத்திருக்க வில்லை; அனைவரையும் வைத்தியசாலைகளுக்கே அனுப்பியுள்ளோம்.

ஆனால், கடந்த கொவிட் நெருக்கடி மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த பொருளாதாரப் பின்னடைவு காரணமாக, பெருமளவிலான தாதியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். அவர்கள் எங்களது உத்தியோகத்தர் பட்டியலில் இருந்தாலும், தற்போது பணியில் இல்லை. இதுவே பற்றாக்குறைக்கு முக்கிய காரணம். 5,000 பேரை வேலைக்கு அமர்த்தியிருந்தும் அது போதுமானதாக இல்லை.

இருப்பினும், இந்த அக்டோபர் மாதத்திற்குள் மேலும் 2,900 புதிய தாதியர்களை வேலைக்கு அமர்த்தத் திட்டமிட்டுள்ளோம். வரும் 2030 ஆம் ஆண்டிற்குள், இந்த 5 வருட காலப்பகுதியில் பட்டதாரிகளுடன் சேர்த்து மொத்தம் 13,600 தாதியர்களை வேலைக்கு அமர்த்துவதே எங்களின் இலக்காகும்.

நீங்கள் மாகாண சபையிடமோ அல்லது எங்களிடமோ கூடுதல் தாதியர்களை கேட்கும் போது, அவர்களுக்கு நாம் பயிற்சி அளிக்க வேண்டும்.

தற்போது தாதியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கும் பணிகளை விரைவுபடுத்தியுள்ளோம். இந்த மாதத்தில் மட்டும் 3,000 மாணவர்களைச் சேர்ப்பதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இவர்கள் 2030 இல் பயிற்சியை முடித்து வெளிவருவார்கள்.

அதேபோல், இந்த ஆண்டில் மத்திய அமைச்சின் கீழ் 1,989 கீழ் நிலை ஊழியர்களை வேலைக்கு அமர்த்த உள்ளோம். இவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

இது தவிர ஏனைய துணை மருத்துவப் பணியாளர்களையும் இணைத்துக் கொள்ள உள்ளோம். சுகாதாரத்துறையைப் பொறுத்தவரை, பணியாளர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு 2 முதல் 5 வருடங்கள் வரை பயிற்சி அளித்த பின்னரே சேவையில் ஈடுபடுத்த முடியும் என்பதுதான் இதில் உள்ள முக்கிய சவாலாகும்-என்றார். (அ)

# 30 இற்கும் அதிகமான மோ. சைக்கிள்களும் 20இற்கும் அதிகமான டிப்பர்களும் பறிமுதல்



கிளிநொச்சி, ஜூன். 29

கிளிநொச்சி பகுதியில் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்ட விசேட வீதி சோதனை நடவடிக்கையின்போது, 30 இற்கும் அதிகமான அதிவேக மோட்டார் சைக்கிள்களும், 20 இற்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மற்றும் ஏனைய வாகனங்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அதிவேகமாக பயணிக்கும் மோட்டார் சைக்கிள்களை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சோதனை நடவடிக்கையின் போது பல்வேறு போக்குவரத்து விதிமீறல்கள் கண்டறியப்பட்டன. அவற்றில் இலக்கத் தகடுகள் இல்லாமை, உரிய ஆவணங்கள் இன்றி வாகனங்களை இயக்குதல், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் அடங்குகின்றன. இதனையடுத்து குறித்த வாகனங்கள் அனைத்தும் சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, உரிய ஆவணங்கள் இல்லாமல் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் 20 இற்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# கத்திக்குத்துக்கு இலக்கனானவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன். 29

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த ரகு துஷ்யந்தன் (வயது 39) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 22ஆம் திகதி இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிவடைந்ததில் துஷ்யந்தன் படுகாயமடைந்த நிலையில், மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டவரை கைது செய்து விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவரை எதிர்வரும் 07ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டு இருந்தது.

இந்நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் நேற்று முன் தினம் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினரால் 750,000 ரூபா நிதி உதவி!

யாழ்ப்பாணம், ஜூன். 29

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினரால் 7,50,000 ரூபா நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கடற்தொழிலுக்குச் சென்று காணாமற்போன மீனவர்களின் குடும்பங்களுக்கும், காணாமற்போனோ 4 மீனவர்களை தேடுவதற்காகவும் முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கற்கோவளம் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் தமது படகுகளுக்கு அதிக செலவிலான எரிபொருளை செலவு செய்து பல நாள்களாக தேடிக் கொண்டிருந்தனர். எனினும் காணாமல் போனவர் தொடர்பான எந்தவித தகவல்களும் இல்லை. இந்த தேடுதலின் போது ஏற்பட்ட எரிபொருள் செலவில் சிறிதளவேனும் ஈடு செய்வதற்காகவே வடமராட்சி வடக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமசந்தினரால் முனை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கற்கோளம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரண்டு சங்கங்களுக்கும் காணாமற்போன நான்கு மீனவர்களின் குடும்பங்களுக்கும் குறித்த நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

நிதி உதவிகளை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் பிரதீபன், செயலாளர் கைற்றஸ், பொருளாளர் மயூரன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பலரும் இணைந்து நேரடியாக சங்கங்களுக்கும் காணாமற்போன மீனவர்களது வீடுகளுக்கும் சென்று வழங்கினர். (அ)

# முன்னாள் போராளி குடும்பத்துக்கு வீடு!



வவுனியா, ஜூன். 29

வவுனியா, கல்மடு முதலாம் படிவம் பகுதியில் அடிப்படை வசதிகள் இன்றி பெரும் இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த முன்னாள் போராளிக்கு புதிய வீடு ஒன்று வழங்கப்பட்டது.

குறித்த குடும்பத்தின் கணவர் அங்கவீனம் அடைந்த முன்னாள் போராளியாக இருப்பதோடு, இக்குடும்பத்தின் மற்றுமொரு அங்கத்தவர் முன்னாள் போராளியாக இருந்து காணாமல் ஆக்கப்பட்டவராவார்.

எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற சூழலில் வாழ்ந்து வந்த இக்குடும்பத்தின் துயரம் அறிந்து, அவர்களுக்கு நிரந்தர வாழ்விடத்தை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை தமிழ் நிலம் மக்கள் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 1.3 மில்லியன் ரூபாய் பெறுமதியான குறித்த வீட்டை நேற்று தமிழ் நில மக்கள் அமைப்பின் தலைவர் வி.வினோகரன் பயனாளிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

குறித்த வீட்டிற்கான நிதியை லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'தமிழர்களுக்கான உதவும் கரங்கள்' அமைப்பின் தலைவர் யோகி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேங்காய் ஏற்றுமதி வருவாய் 21 வீதத்தினால் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன். 29

கடந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் அதே காலப்பகுதியில் நாட்டின் தேங்காய் ஏற்றுமதி வருமானம் 21 வீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் மோதல்கள் காரணமாகக் கடல்வழிப் போக்குவரத்துப் பாதைகளில் ஏற்பட்ட தடங்கல்களுக்கு மத்தியிலும், இந்த வருமான அதிகரிப்பு பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடல்வழிப் போக்குவரத்தில் நிலவும் சவால்களை எதிர்கொள்வதற்காக, மாற்று ஏற்றுமதி முறைகளை ஏற்றுமதியாளர்கள் கையாண்டமை இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

தேங்காய் மற்றும் இளநீர் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதற்கு வானூர்தி சரக்கு சேவைகளைப் பயன்படுத்துமாறு ஏற்றுமதியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

இதன் மூலம் கடல்வழிப் போக்குவரத்துப் பாதிப்புகள் இருந்தபோதிலும், ஏற்றுமதி அளவைச் சீராகப் பேண முடிந்ததாகத் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சாந்த ரணதுங்க தெரிவித்தார்.

சர்வதேச அளவில் நிலவும் கப்பல் போக்குவரத்து நெருக்கடிகளுக்குத் தீர்வாக, இவ்வாறான துரித போக்குவரத்துத் தீர்வுகளை முன்னெடுத்தமை இலங்கையின் தெங்கு ஏற்றுமதித் துறையைப் பாதுகாப்பதில் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
29.06.2026 திங்கட்கிழமை

பராபவ வருடம், ஆனி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**

**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**

– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## செம்மணி போராட்டங்கள்

யாழ்ப்பாணம் செம்மணியில் மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்டு எலும்புக் கூடுகள் மீட்கப்படுகின்ற அதேவேளை, அந்த பகுதியில் அடிக்கடி மக்கள் போராட்டங்களிலும் ஈடுபட்டுவருகிறார்கள்.

அண்மையில் செம்மணி புதைகுழிகளைப் பார்வையிடுவதற்கு காணாமல்போனோர் விவகார அலுவலகத்தின் அதிகாரிகள் சகிதம் நீதிய மைச்சர் ஹர்ஷன நாணயக்கார வருகை தந்தபோது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். நேற்றைய தினம் அங்கு இடம் பெற்ற போராட்டம் செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கோரியது.

செம்மணியில் இடம்பெறும் போராட்டங்களும் தீவிரமடையும் சர்வ தேச விசாரணைக்கான கோரிக்கைகளும் பொறுப்புக்கூறல் தொடர்பிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் உள்ள ஆழமான நெருக்கடியைப் பிரதிபலிக்கின்றன.

செம்மணியில் தொடரும் அகழ்வாராய்ச்சியின்போது இதுவரையில், 400 க்கும் அதிகமான மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கும் நிலையில், கடந்த காலக் கொடுமைகளுக்கான இந்த பெருவாரியான சான்றுகள், மந்தகதியில் நகரும் உள்நாட்டு தடயவியல் செயற்பாடுகளை பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ள முடியாதவையாக்கி விட்டன.

1998ஆம் ஆண்டில் இராணுவத்தினரின் ஒப்புதல் வாக்குமூலங்களைத் தொடர்ந்து செம்மணியில் மனிதப் புதைகுழிகள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் முதன்முதலில் வெளியானபோது முன்னெடுக்கப்பட்ட உள்நாட்டுச் செயன்முறைகள் விரைவாகவே முடங்கிப் போயின. அத்துடன் உயர்மட்டத்தில் இருந்தவர்கள் பொறுப்புக்கூற வைக்கப்படவுமில்லை.

வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் குற்றப் புலனாய்வு திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களை நம்புவது தங்களது நலன்களுக்குப் பாதகமாக அமைந்து விடும் என்ற (நியாயமான) கடுமையான அச்சத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

மனிதப்புதைகுழிகள் தொடர்பிலான விசாரணைகளுக்கு முறையானதும் நிலையானதுமான செயற்பாட்டு நடைமுறைகள் இல்லை என்பதை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருக்கிறது.

மரபணு பகுப்பாய்வுக்கான சர்வதேச நிபுணத்துவம் நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில் “தேவை ஏற்படும்போது மட்டுமே ” கோரப்படும் என்று அண்மையில் பாராளுமன்றத்தில் நீதியமைச்சர் நாணயக்கார கூறிய கருத்தை பாதிக்கப்பட்ட மக்களும் செம்மணிப் போராட்டக்காரர்களும் அரசாங்கத்தின் தயக்கத்தின் வெளிப்பாடாகவே பார்க்கிறார்கள்.


அகழ்வாராய்ச்சிக் கட்டத்திலேயே முக்கியமான சான்றுகள் தவறாகக் கையாளப்படுவதையோ அல்லது சிதைவடைவதையோ தடுப்பதற்கு சர்வதேச உதவி உடனடியாகத் தேவை தமிழ் அரசியல் சக்திகளும் மனித உரிமைகள் அமைப்புகளும் வாதிடுகின்றன.

ஒவ்வொரு எலும்புக் கூட்டுக்கு பின்னாலும் பல தசாப்தங்களாகத் திணிக்கப்பட்ட மௌனத்தையும் தங்களது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற தெளிவற்ற இழப்புத் துயரத்தையும் தாங்கி நிற்கும் ஒரு குடும்பம் இருக்கிறது.

செம்மணி அகழ்வாராய்ச்சிப் பணியை சாதாரணமான ஒரு தடயவியல் பணியாகப் பார்க்காமல், அதனை ஒளிவுமறைவற்றதும் சர்வதேச அளவில் கண்காணிக்கப்படுவதுமான ஒரு சுதந்திரமான விசாரணையாக மாற்றுவது மாத்திரமே மெய்யாகவே உண்மையையும் சட்டரீதியான பொறுப்புக் கூறலையும் வழங்குவதற்கு வழிவகுக்கும். இதைத் தவிர, பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய வேறு எந்த செயன்முறையும் இப்போதைக்கு இருக்க முடியாது.

# பிரெக்ஸிட்டுக்கு பின்னரான பிரிட்டன்

## தேசியவாதத்தால் நஞ்சூட்டப்பட்ட அரசியல்



(ராஃபேல் பெஹ்ர், தி கார்டியன்)

பிரிட்டன் ஆள முடியாத நாடாக ஒன்றும் மாறிவிடவில்லை, ஆனால் நாட்டின் உயரிய பதவியான பிரதமர் பதவி, மிக வேகமாகச் செயலாற்றக்கூடிய ஒரு நஞ்சால் தீண்டப்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் ஆறு பிரதமர்கள் மாறிவிட்டார்கள். பிரதமர் இல்லமான “இலக்கம் 10 டவுணிங் வீதி” வாசலில் நின்றுகொண்டு, பிரதமர்கள் தங்கள் இராஜினாமா உரையை நிகழ்த்தும் காட்சி, இப்போது ஒரு பழகிப்போன சடங்காகவே மாறிவிட்டது.

பிரெக்ஸிட் (Brexit) பொதுவாக்கெடுப்புக்குத் பிறகு, டவுனிங் வீதியில் ஒரு பிரதமரின் சராசரி ஆட்சிக்காலம் இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவாகவே இருந்துள்ளது. அந்த வாக்கெடுப்பு தான் நேரடியாக கீர் ஸ்டார்மரின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தது என்று சொல்ல முடியாது. ஐரோப்பிய ஒன்றியத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாத சில சொந்தக் குறைபாடுகளும் அவரிடம் இருந்தன. தான் ஏன் ஆட்சிக்கு வருகிறோம் என்ற தெளிவான நோக்கம் இல்லாமல் அவர் அதிகாரத்தைக் கைப்பற்றினார் அதோடு, அதைப் பற்றி மக்களுக்கு இன்னும் விரிவாக விளக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் அவர் விரும்பவில்லை.

ஆனால்,

பிரெக்ஸிட்டுக்குப் பிந்தைய வறண்ட அரசியல் சூழலிலும், பத்தாண்டுகளாகத் தொடரும் மக்களின் அதிருப்திக்கு மத்தியிலும், அவருடைய பலவீனங்கள் மிகக் கொடூரமாக வெளிப்பட்டுவிட்டன.

தவறான அரசதந்திரத்தால் நாட்டிற்கு நாமே தீங்கிழைத்துக் கொண்ட ஒரு செயலுக்காக, நாட்டின் வளங்கள் வீணடிக்கப்படும்போது நாட்டை ஆட்சி செய்வது கடினமாகிறது.

பிரிட்டனை ஐரோப்பிய ஒற்றைச் சந்தையிலிருந்து (Single Market) பிரித்தெடுப்பதும், வர்த்தகத்தைத் தடுப்பதற்காகப் புதிய தடைகளை உருவாக்குவதும் பிரிட்டனின் இராஜதந்திர உறவுகளையும் பொருளாதார நம்பகத் தன்மையையும் பெருமளவில் பாழடித்தன. இந்த பிரெக்ஸிட் வாக்கெடுப்பு நடக்காமல் இருந்திருந்தால் பிரிட்டன் எவ்வளவு பணக்கார நாடாக இருந்திருக்குமோ, அந்தப் பொருளாதார வளர்ச்சியோடு ஒப்பிடும்போது, பிரெக்ஸிட்டால் ஏற்பட்ட இழப்பு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 4 சதவீதம் முதல் 8 சதவீதம் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் புள்ளிவிவரத்தில் மக்களின் உணர்வு ரீதியான பாதிப்புகள் சேர்க்கப்படவில்லை விவாதங்களின் தரம் குறைந்தது தீவிரவாதமும், அரசியல் பிளவுகளும் அதிகரித்தது் நாட்டை ஏழ்மையாக்குவதையே விடுதலை என்று சொல்லி விற்ற ஒரு இயக்கத்தால் ஒட்டுமொத்த அரசியல் கலாசாரமும் நஞ்சானது. இறுதியில் எல்லாம் தவறாகப் போனபோது, தாங்கள் கண்ட பகற்கனவுகளுக்குத் துணைநிற்க மறுத்ததற்காக, வாக்கெடுப்பில் தோற்றுப்போன மக்களின் மேல் பழி சுமத்தப்பட்டது.

பொருளாதார சமநிலையின்மையையும் ஜனரஞ்சக அரசியலுக்கு (Populism) வழிவகுக்கும் சமூகச் சீர்குலைவுகளையும் சந்தித்த ஒரே ஜனநாயக நாடு பிரிட்டன் மட்டுமல்ல.

சோவியத் யூனியன் வீழ்ந்தபோது, தாராளமய உலகமயமாக்கல் (Liberal Globalisation) தனது இறுதி கருத்தியல் போரில் ஏற்கனவே வென்றுவிட்டதாக நினைத்து மெத்தனமாக இருந்தது.

அதற்கு எதிராக ஐரோப்பா முழுவதிலும் அத்திலாந்திக் கடலுக்கு அப்பாலும் வெடித்த தேசியவாதப் பின்னடைவின் ஒரு பகுதியாகவே பிரெக்ஸிட்டை வரலாற்றாசிரியர்கள் பார்க்கிறார்கள்.

இந்த நோய் பிரிட்டனுக்கு மட்டுமே உரியது அல்ல, ஆனால் இதில் சில உள்ளூர் தனித்துவங்கள் உள்ளன. இது ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் வெளிப்பட்டது தான் பிரிட்டனைப் பொறுத்தவரை விடயங்களை மேலும் சிக்கலாக்கியது.

ஒரு சாதாரணத் தேர்தலில் ஒரு தீவிரவாதக் கட்சியோ அல்லது ஒரு ஜனரஞ்சகத் தலைவரோ திடீரென எழுச்சி பெறும்போது அங்கு ஒரு தெளிவு இருக்கும். அதாவது, அவர்களின் இந்த வெற்றி அவர்களின் செயற்பாட்டைப் பொறுத்தது என்ற மறைமுக அங்கீகாரம் அதில் இருக்கும். வாக்காளர்கள் அடுத்த தேர்தலில் தங்கள் முடிவை மாற்றிக்கொள்ளலாம். எதிர்க்கட்சிகள் ஒன்று திரண்டு அவர்களை வீழ்த்தலாம் - ஹங்கேரியில் 16 ஆண்டுகள் ஆட்சி செய்த விக்டர் ஓர்பனை இந்த ஆண்டு வீழ்த்தியது போன்று.

ஆனால், ஒரு பொதுவாக்கெடுப்பில் “அடுத்த முறை” என்ற வாக்குறுதி இருப்பதில்லை. மாறாக, “இதுவே இறுதித் தீர்ப்பு என்று வாதிட்டது தான் பிரெக்ஸிட்டை ஆதரித்தவர்களின் துருப்புச் சீட்டாக இருந்தது.

பிரெக்ஸிட் என்பது ஒரு தவறு என்பதைக் காட்ட எவ்வளவு ஆதாரங்கள் இருந்தாலும், “விளைவுகள் எதுவாக இருந்தாலும் இந்த முடிவோடுதான் வாழ வேண்டும், அதுவே மக்களின் பேச்சுவார்த்தைக்கு இடமில்லாத (மறுக்க முடியாத) விருப்பம்” என்ற வாதத்தை எதனாலும் உடைக்க முடியவில்லை. அந்த முடிவின் பாரதூரமான விளைவுகள் வாக்குச் சீட்டில் இருந்த கேள்வியால் மறைக்கப்பட்டன் பிரச்சாரத்தின் போதும் அவை சரியாக விளக்கப்படவில்லை.

பிரெக்ஸிட்டுக்கு ஆதரவாக வாக்களித்த மக்களின் எந்தவொரு குறையும், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறியதால் தீர்க்கப்படப் போவதில்லை. நாட்டை ஏழையாக்குவதும், உலக அரங்கில் பிரிட்டனின் அதிகாரத்தை உயர்த்தும் ஐரோப்பியக் குழுக்களின் ஆசனங்களை இழப்பதும், ”அதிகாரத்தை மீண்டும் நம் கைக்கே கொண்டு வருவதற்கான” வழிமுறையாக இருக்க முடியாது.

இந்தத் தவறான வழிநடத்துதல் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. பிரஸ்ஸல்ஸில் (ஐரோப்பிய ஒன்றிய தலைமையகம்) இருக்கும் ஒரு கற்பனையான ஆதிக்கவாதிக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டமாக இதைக் சித்தரித்ததன் மூலம், பிரெக்ஸிட் என்பது யார் அதிக தேசபக்தி கொண்டவர் என்பதைக் காட்டும் ஒரு போட்டியாக மாற்றப்பட்டது. பிரெக்ஸிட்டை ஆதரித்தவர்களின் இலக்கு ஒரு முட்டுச்சந்தில் போய் முடிந்தபோது, தங்களின் நோக்கத்தைத் தக்கவைத்துக் கொள்ள அவர்களுக்குப் புதிய எதிரிகள் தேவைப்பட்டனர். இது ஒரு பழைய கதைதான். புரட்சிகள் தோல்வி அடையும் போது அதற்கு சதிகாரர்களும் துரோகிகளும், “மக்களின் எதிரிகளும்” தான் காரணம் என்று பழிசுமத்துவது வழக்கம்.

ஏமாற்றம் நீடிக்க நீடிக்க, பலிகடாக்களுக்கான தேடலும் தீவிரமாகிறது. நைஜல் ஃபாராஜ் பத்து ஆண்டுகளுக்கு முன்பு தான் கண்ட கனவு நனவாகிவிட்டதே என்று பெருமிதத்தில் ஓய்வெடுக்கவில்லை மாறாக, நாட்டின் அனைத்து அவலங்களுக்கும் குடியேற்றவாசிகளே (Immigration) காரணம் என்று காட்டுவதற்கான இன்னும் வன்மமான வழிகளைத் தீவிரமாகத் தேடிக்கொண்டிருக்கிறார்.

(மிகுதி நாளைய இதழில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 29 திங்கட்கிழமை
பராபவ வருடம் - ஆனி 15
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : பவுர்ணமி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். சிலவற்றிற்கு உங்கள் அவசர முடிவுகள் காரணம் என்பதை உணர்வீர்கள். வியாபாரத்தில் வசூல் மந்தமாக இருக்கும். கடினமாக உழைக்க வேண்டும்.

**இடபம்**
கணவன்-மனைவி ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் ஆதரிப்பார்கள். நிம்மதி உண்டாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். புது வேலை அமையும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களை சுற்றி இருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். பயணங்கள் திருப்திகரமாக அமையும். கலை பொருட்கள் வாங்குவீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். பழைய சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சக உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**துலாம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். உற்சாகமான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது.

**தனுசு**
எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடும். நிதானம் தேவைப்படும்.

**மகரம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**மீனம்**
உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாக பேசி செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெறுவீர்கள். மதிக்கப்படுவீர்கள்.

# தேசிய அடையாள அட்டை இல்லாத முதியவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கும் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 29

தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தினால், அரசினால் வழங்கப்படும் மாதாந்த முதியோர் உதவித்தொகையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ள குறைந்த வருமானம் கொண்ட மூத்த குடி மக்களுக்காக, விசேட அடையாள அட்டை வழங்கும் திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டமானது, கிராமிய வளர்ச்சி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் உள்ள தேசிய முதியோர் செயலகம், ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போது 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட தகுதியுள்ள முதியவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 5,000 உதவித்தொகையை அரசாங்கம் வழங்கி வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 10 இலட்சம் பயனாளிகள் இணைக்கப்பட்டுள்ள நிலையில், தகுதியுள்ளவர்களில் சுமார் 76,716 பேர் தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் இந்த உதவித்தொகையைப் பெற முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்னைக்குத் தீர்வாகவே இந்த விசேட திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் தேசிய முதியோர் செயலகம் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாததால் உதவித்தொகை பெற முடியாத முதியவர்கள், உடனடியாகத் தமது கிராம உத்தியோகத்தர், சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் அல்லது முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

தகுதியுள்ள பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களை விரைவில் இந்த உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் கொண்டுவருவதற்காக, மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கள், சமூக சக்தி அமைப்புகள் மற்றும் சமூக மேம்பாட்டுக் குழுக்களின் ஊடாகத் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (அ)

# வீதி பயன்பாட்டுக்கு தகுதியற்ற வாகனங்களை பரிசோதிக்கும் நடவடிக்கைகள் அடுத்த வாரம்!

கொழும்பு, ஜூன். 29

வீதி பயன்பாட்டுக்கு தகுதியற்ற வாகனங்களைக் கண்டறியும் விசேட சோதனை நடவடிக்கைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, வீதி பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

இந்தச் சோதனை நடவடிக்கைகள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை மலையகப் பகுதிகளில் இயக்கப்படும் வாகனங்கள் குறித்து இந்தச் சோதனை நடவடிக்கையின் போது விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

சோதனைக்கு உட்படுத்தப்படும் வாகனங்களில், வீதி பயன்பாட்டுக்கு தகுதியற்றவை என அடையாளங்காணப்படும் வாகனங்களை சேவையிலிருந்து நீக்கவும், அவை பொது வீதிகளில் இயக்கப்படுவதைத் தடுக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவுள்ளனர். (அ)

# காங்கேசன்துறை முதல் பொத்துவில் வரை கடற்பகுதிகளுக்கு செம்மஞ்சள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 29

காங்கேசன்துறை முதல் மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் நிலை ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் செம்மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் நேற்று முற்பகல் 11.00 மணிக்கு வெளியிடப்பட்ட இந்த எச்சரிக்கை, இன்று முற்பகல் 11.00 மணி வரை நடைமுறையில் இருக்கும்.

இதேவேளை மணிக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிலாபம் முதல் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பகுதிகளில் அலைகளின் உயரம் 2.0 முதல் 3.0 மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை குறித்து கடற்படையினரும் மீனவ சமூகத்தினரும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும், வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் எதிர்கால வானிலை முன்னறிவிப்புகளைத் தொடர்ந்து அவதானிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

# குற்றவாளிகள் தப்பமுடியாது விசாரணை வேட்டை தீவிரம்!

**அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு**

கொழும்பு, ஜூன். 29

குற்ற ராச்சியத்தை கட்டியெழுப்புவதற்காக கடந்த கால ஆட்சியாளர்கள் செய்த சூழ்ச்சிகள் அம்பலமாகத் தொடங்கியுள்ளன. இந்த அனைத்து சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாதாள குழு உறுப்பினர்களிடமிருந்து முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் மகன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் ஒருவர் ஆகியோர் லஞ்சம் பெற்றுள்ள விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

குற்ற இராச்சியத்தைக் கட்டியெழுப்பவே இவர்கள் (முன்னாள் ஆட்சியாளர்கள்) சூழ்ச்சி செய்துள்ளனர். போதைப்பொருள் குற்றவாளிகளை விடுவிப்பதற்காக கோடி கணக்கில் லஞ்சம் வாங்கியுள்ளனர். இதுதான் இவர்கள் கட்டியெழுப்பிய அரசியல் கலாசாரம்.

குற்ற ராச்சியத்தை கட்டியெழுப்புவதற்கு அவர்கள் செய்த சூழ்ச்சிகள் அம்பலமாக தொடங்கியுள்ளன. இவற்றை மூடிமறைப்பதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். அனைத்து சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட்டு, நாட்டின் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படும். இதற்காகவே மக்கள் எமக்கு ஆணை வழங்கினர்.- என்றார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் கொலை!

கொழும்பு, ஜூன். 29

வீரகெட்டிய பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும், அம்பாந்தோட்டை மாவட்ட இளைஞர் முன்னணியின் ஊடகச் செயலாளரும் 30 வயதுடைய இளைஞர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹகுருவெல பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற விருந்துபசாரம் ஒன்றின்போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதிலேயே இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாக்குவாதம் தீவிரமடைந்ததில், சந்தேகநபர் கூர்மையான ஆயுதத்தால் குறித்த நபரைத் தாக்கியுள்ளார்.

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் மெதமுலன பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதலின்போது சந்தேகநபரின் தாயாரும் காயமடைந்து, சிகிச்சைக்காக வீரகெட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கதிரியக்க சிகிச்சைகளில் பின்னடைவு; நெருக்கடியில் 1000 புற்றுநோயாளிகள்!

கொழும்பு, ஜூன். 29

அரச சுகாதாரத் துறையில் கதிரியக்கச் சிகிச்சை சேவைகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் காரணமாக சுமார் 1,000 புற்றுநோய் நோயாளிகள் அத்தியாவசிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதாக சுகாதாரத் தொழில் வல்லுநர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதாரத் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில்,

கதிரியக்கச் சிகிச்சைத் திட்டமிடலுக்குப் பயன்படுத்தப்படும் பழைய "சிரி சிமுலேஷன்" இயந்திரம் கடந்த ஏப்ரல் 29 அன்று செயலிழந்த நிலையில் மே 21ஆம் திகதியளவில் புதிய "சிரி சிமுலேஷன்" இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்ட போதிலும், அந்த இயந்திரம் நிறுவப்பட்ட கட்டடத்தின் கூரையிலிருந்து நீர் கசிந்ததன் காரணமாக அது பயன்படுத்தப்படாமல் உள்ளது.

ஜூன் முதலாம் திகதியளவில் தொழில்நுட்பப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டபோதிலும், இந்த இயந்திரம் இன்னும் நோயாளிகளின் சிகிச்சைக்காகப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படவில்லை. கதிரியக்கச் சிகிச்சைக்கு முந்தைய மிக முக்கியமான ஒரு செயல்முறையே "சிரி சிமுலேஷன்" ஆகும்.

இது மருத்துவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பகுதியை துல்லியமாகக் கண்டறியவும், கதிரியக்கக் கதிர்களின் திசைகளைத் தீர்மானிக்கவும், சிகிச்சைக்கான கோணங்களைத் திட்டமிடவும், கதிரியக்க அளவைக் கணக்கிடவும் மற்றும் ஆரோக்கியமான திசுக்களுக்குத் தேவையற்ற பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுக்கவும் உதவுகிறது.

"சிரி சிமுலேஷன்" செயல்முறை இல்லாமல் கதிரியக்கச் சிகிச்சையைத் தொடங்குவது நடைமுறையில் சாத்தியமற்றது என்பதால், புற்றுநோய் சிகிச்சையின் முக்கியமான கட்டத்தில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

அவசர சந்தர்ப்பங்களுக்காக தற்போது "பி.ஈ.ரி-சி.ரி." இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்பட்டாலும், அது "சிரி சிமுலேஷன்" நோக்கத்திற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்படாததால், பதிலீடான அதற்கு தீர்வாகாது.

இந்தத் தாமதம் காரணமாக ஏற்கனவே கீமோதெரபி, அறுவை சிகிச்சை மற்றும் இதர சிகிச்சைகளை முடித்த நோயாளிகள் காத்திருப்புப் பட்டியல்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

கதிரியக்கச் சிகிச்சை தள்ளிப்போடப்படுவதால், அவர்களுக்கு மீண்டும் புற்றுநோய் தீவிரமடையும் அபாயம் அதிகரித்துள்ளது.

மகரகம, கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட குறிப்பிட்ட சில மத்திய நிலையங்களில் மாத்திரமே கதிரியக்கச் சிகிச்சை வசதிகள் உள்ளன. எனவே ஒரு மத்திய நிலையத்தில் ஏற்படும் தாமதம் நாடு முழுவதிலும் உள்ள நோயாளிகளைப் பாதிக்கும் -என்றார். (அ)

# முதலீடு செய்ய தயாராக இருப்போருக்கு அரசாங்கம் அதிகபட்ச ஆதரவு வழங்கும்!

## ஜனாதிபதி அநுரகுமார கூறுகிறார்



கொழும்பு, ஜூன். 29

உள்நாட்டு தொழில்துறையினரை வலுவூட்டி, அவர்களை ஏற்றுமதி சந்தைக்கு பிரவேசிக்கச் செய்வதன் மூலம் டொலர் வருமானத்தை அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும், முதலீடு செய்வதற்கும் சந்தையை வெல்வதற்கும் தயாராக இருப்பவர்களுக்கு அரசாங்கத்தின் அதிகபட்ச ஆதரவு வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இறப்பர் மற்றும் தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் துறையின் முன்னணி வர்த்தகர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

உலகில் பல்வேறு நாடுகள் உள்நாட்டுத் தொழில்களை ஏற்றுமதிக்கு ஊக்குவிப்பதன் மூலமே பொருளாதார ரீதியாக வலுவடைந்துள்ளன என்பதை இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தற்போதுள்ள வெளிநாட்டுக் கடன் சுமையிலிருந்தும் சர்வதேச நிதி நிறுவனங்களில் தங்கியிருப்பதிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரே வழி உள்நாட்டு உற்பத்தித் திறனை அதிகரிப்பதே என்றும் சுட்டிக்காட்டினார்.

உள்நாட்டுத் தொழில்துறையினர் ஏற்றுமதித் துறைக்குள் பிரவேசிப்பதை ஊக்குவிப்பதற்காக நடைமுறைப்படுத் தப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இறப்பர் மற்றும் தேயிலைத் தொழில்துறையை மேம்படுத்துவதற்கும், ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கும் 2026-2030 தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்க புதிய மூலோபாய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. (அ)

# இளைஞர் வேலையின்மை நாட்டில் கணிசமாக குறைவு

கொழும்பு, ஜூன். 29

சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகள் மூலமாகவும், தனியார் துறையுடனான கூட்டுப் பங்களிப்பின் மூலமாகவும் அரசாங்கம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதால், இலங்கையில் இளைஞர் வேலையின்மை விகிதம் கடந்த ஒரு வருடத்தில் கணிசமாகக் குறைந்துள்ளதாக இளைஞர் விவகார பிரதி அமைச்சர் தினிந்து சமன் ஹேன்னாயக்க தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டியவில் உள்ள தேசிய இளைஞர் படையணி பயிற்சி நடைபெற்ற 'இளைஞர் உத்வேக விளையாட்டு விழா 2026' இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு விழாவில் முதன்மை அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் இளைஞர்களுக்கு சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்குவதே தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான இலக்காகும் என அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது:-

இளைஞர்கள் போதைப் பொருள் பழக்கங்களுக்கு அடிமையாவதைத் தடுத்து, அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக முறையான தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அத்துடன், ஒழுக்கநெறி மற்றும் மனித விழுமியங்களை வளர்க்கும் நோக்கில் விளையாட்டு மற்றும் கலைத்துறை சார்ந்த நடவடிக்கைகள் நாடு தழுவிய ரீதியில் ஊக்குவிக்கப்படும்.

மேலும், இலங்கை இளைஞர்களின் திறமைகளை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதற்காக அரசாங்கத்தினால் இரண்டு புதிய திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன-என்றார். (அ)

# டெங்கு உயிரிழப்பு 31 ஆக உயர்ந்தது!

கொழும்பு, ஜூன். 29

இலங்கையில் இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளதாக, தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

ஜூன் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட சமீபத்திய அறிக்கையின்படி,

டெங்கு நோயின் இறப்பு விகிதம் 0.06 வீதமாக பதிவாகியுள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 51 ஆயிரத்து 49 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதில் ஜூன் மாதத்தில் மட்டும் 17 ஆயிரத்து 208 பேர் டெங்கு தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை, கடந்த மாதத்தில் நோய் பரவல் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதை காட்டுகிறது.

மேல், தென், சப்ரகமுவ, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாடு முழுவதும் 124 மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு பரவல் அதிக ஆபத்து நிலவும் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த, வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தேங்கியுள்ள நீரை அகற்றி, கொசு பெருகும் இடங்களை அழிக்க பொதுமக்கள் உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிரான்ஸ் செல்கின்றார் ஜனாதிபதி அநுரகுமார!

கொழும்பு, ஜூன். 29

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எதிர்வரும் ஜூலை மாதம் 16ஆம் திகதி பிரான்ஸ் நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள வுள்ளார் என ஜனாதிபதி ஊட கப் பிரிவு அறிவித்துள்ளது.

பிரான்ஸ் அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அழைப்புக்கு இணங்கவே ஜனா திபதியின் இந்த விசேட வெளி நாட்டு விஜயம் அமையவுள்ளது.


இந்த உயர்மட்ட இராஜதந் திர விஜயத்தின்போது, இலங்கை



மற்றும் பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வுள்ளது.

அத்துடன், தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலைக ளுக்கு மத்தியில், பிரான்ஸ் நாட் டிலிருந்து இலங்கைக்குப் பாரிய புதிய வர்த்தக முதலீட்டு வாய்ப் புகளைக் கவர்ந்து ஈர்ப்பது குறித் தும், இரு நாட்டுத் தலைவர்க ளுக்கும் இடையே பிரத்தியேக மாகப் பேச்சுவார்த்தைகள் நடத் தப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

# கதிர்காம பாதயாத்திரீகர்களுக்கு காரைதீவில் மகத்தான வரவேற்பு!



அம்பாறை, ஜூன். 29

காரைதீவில் யாழ். கதிர்காம பாத யாத்திரீகர்களுக்கு நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை மகத்தான வரவேற்பளிக்கப்பட் டது.

அவர்களுடன் பயணிக்கும் சுப்பிரமணியத்தைக் காண பலர் முண்டியடித்தனர்.

அடியார்கள் அனைவரும் காரைதீவினை வந்தடைந்ததும் முதன்முதலாக முருகபத்தரான சண்முகம் தேவதாஸ் குடும்பத் தினர் வழமைபோல வரவேற்று உபசரித்தனர். ஊர்ப் பிரமுகர்க ளும் கலந்து கொண்டனர்.

அத்தோடு யாத்திரையில் வழமைக்கு மாறாக இம்முறை சுப்பிரமணியம் எனும் நாயும், கல்முனைக்குடி சம்பவத்திற்கு பிறகு வருகை தந்தது.

இந்த சுப்பிரமணியத்தை பார்ப்பதற்கு ஏராளமானோர் வருகை தந்தனர்.

அதனை தொடர்ந்து அடி யார்கள் நேற்று முன் தினம் இரவு காரைதீவு கண்ணகி அம் மன் ஆலயத்தில் தங்கினர். நேற் றுக் காலை சித்தர் சித்தானைக் குட்டி ஆலயத்திற்குச் சென்று மதியம் நந்தன சித்திவிநாயகர் ஆலயத்திலும் அங்கிருந்து சென்று இரவு கந்தசுவாமி ஆல யத்தையடைந்தனர். (அ)

# ஐ.நாவின் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்கான குழுவில் இலங்கைக்கு அங்கத்துவம்!

கொழும்பு, ஜூன். 29

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற தேர்தலில், பெண்களுக்கு எதி ரான பாகுபாடுகளை ஒழிப்பதற் கான குழுவில் இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

செல்லுபடியாகும் 185 வாக் குகளில்144 வாக்குகளைப் பெற்று, போட்டியிட்ட அனைத்து வேட் பாளர்களிலும் இலங்கை அதிக வாக்குகளைப் பெற்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதிலும், பாதுகாப் பதிலும் மற்றும் பாலின சமத்து வத்தை ஊக்குவிப்பதிலும் இலங் கையின் அர்ப்பணிப்பு மீது சர்வ தேச சமூகம் கொண்டுள்ள நம் பிக்கையை இந் தத் தேர் தல் பிரதிப லிக்கிறது என அமைச்சு குறிப் பிட்டுள்ளது.

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஜூன். 29

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தின் புதிய தலைவராக வைத்தியர் சந் திக எப்பிட்டகடுவ தெரிவு செய்யப்பட் டுள்ளார்.

சங்கத்தின் 2026-2027 ஆம் ஆண்டுக் கான வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று முன் தினம் நடைபெற்றபோது, அவர் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

அதேவேளை, சங்கத்தின் புதிய பொதுச் செயலாளராக வைத்தியர் பண்டார வர காகொட தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும், 2026-2027 ஆம் ஆண்டுக் கான நிர்வாகக் குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர்களும் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள் ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங் கம் தெரிவித்துள்ளது. (அ)

# உப பொலிஸ் பரிசோதகர் கைது!

கொழும்பு, ஜூன். 29

யட்டியந்தோட்டை பொலிஸ் நிலை யத்தின் போக்குவரத்து பிரிவின் பொறுப் பதிகாரியாக பணியாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர், தனது உத்தியோக பூர்வ துப்பாக்கி காணாமற்போன சம்ப வம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள் ளார்.

சீதாவக்கபுர குற்றப் புலனாய்வுப் பிரி வின் அதிகாரிகள் மேற்கொண்ட விசா ரணைகளின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 26ஆம் திகதி கடமை நிமித் தம் வெளியே சென்ற குறித்த அதிகாரி, பிஸ்டல் வகை உத்தியோகபூர்வ துப் பாக்கி ஒன்றையும், அதனுடன் 10 தோட் டாக்களையும் எடுத்துச் சென்றதாகவும், கடமையை முடித்த பின்னர் அவை மீள ஒப்படைக்கப்படவில்லை எனவும் தெரி விக்கப்படுகிறது.

இதனையடுத்து, சீதாவக்கபுர குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் மேற் கொண்ட விசாரணைகளின் அடிப்படை யில், உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# களுபோவில வைத்தியசாலையில் புதிய இதய ஆய்வகம் நாளை திறப்பு

கொழும்பு, ஜூன். 29

களுபோவில வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்ட, பல அதிநவீன வசதிகளை உள்ளடக்கிய இதய ஆய்வ கம், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில் நாளை உத்தியோக பூர்வ மாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படவுள்ளன.

நாட்டின் சுகாதாரம் சார்ந்த சேவை களை நெறிப்படுத்துவதற்காக, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்ட புதிய திட்டங்க ளின் கீழ், இவை நிறுவப்பட்டுள்ளது.

அதன்படி, களுபோவில வைத்திய சாலையில் இதய வடிகுழாய் ஆய்வுகூ டம், டிஜிற்றல் கழித்தல் ஆஞ்சியோகி ராபி அலகு, லித்தோட்ரிப்சி பிரிவு - சிறுநீரக சம்பந்த நோய் ஆய்வு மற்றும் சிறுநீர் கல் அகற்றும் பிரிவு மக்கள் பயன் பாட்டுக்கு கையளிக்கவுள்ளதாக வைத்தி யசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சாகரி கிரிவந்தெனிய தெரிவித்துள்ளார். (அ)

# மரண அறிவித்தல்



## A.N.S. திருச்செல்வம்

[மூத்த பத்திரிகையாளர், ஓய்வுநிலை பொது நூலகர், பருத்தித்துறை பிரதேச சபை]

பருத்தித்துறை வராத்துப்பளையைப் பிறப்பிடமாகவும், புற்றளையை வசிப்பிடமாகவும் கொண்ட A. N. S. திருச்செல்வம் அவர்கள் 25-06-2026 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தாதேவி அவர்களின் அன்புக் கணவரும்,

அருணா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம் வடமராட்சி கிழக்கு), சிவதேவன்(பிரான்ஸ்), அபிரா (வைத்தியர்-ஆதார வைத்திய சாலை-பருத்தித்துறை), கிரிசா (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம் - பருத்தித்துறை), துவாரகன் (உதவி அஞ்சல் அதிபர்-வல்வெட்டித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

சந்திரமோகன் (இலங்கை முதலீட்டு சபை-யாழ்ப்பாணம்), நிருஷா (பிரான்ஸ்), டினேஸ்குமார் (வைத்தியர்-பெலாரஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சறோஜினிதேவி, யோகேஸ்வரி, காலஞ்சென்றவரான சூரியகுமாரி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

நேகா (பிரான்ஸ்), ஷக்ஸி (பிரான்ஸ்), அஸ்விதன் (புற்றளை), அஷ்மிதன் (புற்றளை) ஆயோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 30-06-2026 செவ்வாய்கிழமை அன்று மு.ப 07:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மு.ப 10:00 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்
புற்றளை, புலோலி

தொடர்புகளுக்கு :-
தி.துவாரகன் (மகன்)
0767353106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### செம்மணிப் பகுதியில்...

இந்த நிகழ்வின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் வளர்ப்போர்,நன்னீர் வளர்ப்பு ஆகிய கடற்றொழில்களில் ஈடுபடுவோர் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் நன்னீர் மீன்வளர்ப்பு திட்டம் மற்றும் இறால் வளர்ப்பு திட்டங்களை மேம்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர்,

நாங்கள் முன்னர் போன்றல்ல, முன்னர் நீங்கள் வருகின்ற போது உங்களுக்குப் பின்னால் அரசியல்வாதிகள் இருந்தார்கள்.

அரசியல்வாதிகளின் அராஜகம் இருந்தது. அந்த அராஜகம் அனைத்துக்கும் இன்றைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதுடன் நீங்கள் வந்து சுதந்திரமாகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏதுவான சூழல் நாட்டில் உருவாகியிருக்கின்றது. அதேபோன்று இன்றைக்கு நாட்டில் சட்ட ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு வருகின்றது.

அதன் மூலமாக நாட்டில் யார் தவறு செய்தாலும், யார் குற்றம் இழைத்தாலும், அந்த குற்றவாளிகளை இனம் கண்டு அவர்களுக்கு எதிரான எங்கள் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இந்த நாட்டில் இலஞ்ச ஊழல் மோசடியில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்போம் என்று நாங்கள் மக்களுக்கு வாக்குறுதி அளித்தோம்.

அந்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப இதுநாள் வரைக்கும் யாருமே எதிர்பார்க்காத பெரிய புள்ளிகளான ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷாக்கள் அதேபோன்று நாட்டின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இருக்கின்ற மக்களுடைய பணத்தைக் கொள்ளையடித்த கும்பல் என அனைவரும் இன்றைக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

அது மாத்திரமல்ல, சுரேஷ் சாலே என்ற புலனாய்வுப் பிரிவின் பிரதம அதிகாரியும் கூட விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

நாட்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் உயிரிழந்த மக்களுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும். அதேபோன்று நாங்கள் போதைப்பொருளை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றோம். அது மாத்திரமல்ல போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் அவர்களுடைய ராஜாங்கம் இன்றைக்கு முடக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதனாலேயே தான் முன்னாள் நீதி அமைச்சரும், அவருடைய மகனும் கூட இதில் தொடர்புபட்டிருக்கின்ற விடயம் தெரியவந்துள்ளது.

அத்துடன், பாதாள உலகக் கும்பல்கள் மற்றும் பாதாள உலகத் தலைவர்களைச் சட்டத்திலிருந்து பாதுகாக்கின்றோம் என்ற வாக்குறுதியின் கீழ், கோடிக்கணக்கான ரூபாய் பரிமாறப்பட்டுள்ளதாக விசாரணைகள் ஊடாக தெரியவந்துள்ளது.

முன்னாள் ரணில் விக்கிரமசிங்கவோடு இருந்த முக்கியமான புள்ளிகளும் கூட இதற்குப் பின்னால் இருக்கின்றார்கள் என்று விசாரணைகள் முடுக்கி விடப்பட்டு வருகின்றன.

விஜயதாஸ ராஜபக்ஷ இதற்குப் பின்னால் இருக்கின்றாரா என்கின்ற விசாரணைகள் கூட முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எது எவ்வாறானபோதிலும் விசாரணைகள் தொடர்கின்றன.

இவ்வாறான கள்ளர்கள், திருடர்கள், மோசடிக்காரர்கள் படிப்படியாக ஒருவர் பின் ஒருவராக சிறைச்சாலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த இடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். செம்மணிப் பகுதியில் முன்னெடுக்கப்படும் போராட்டம் தேவையில்லாத போராட்டம். ஏனென்றால் நீங்கள் போராட வேண்டியதில்லை, நீங்கள் போராடுகின்றது எதற்காக என்றால் வேறொன்றுமல்ல, 1990ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட படுகொலைக்காகத்தான்.

அந்த படுகொலைகளைச் செய்த பாவிகள் இருக்கின்றார்கள் என்பது உண்மை. அன்றைய காலகட்டங்களில் கொலை செய்யப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உடல் எச்சங்கள் இன்றைக்குத் தோண்டி எடுக்கப்படுவது உண்மை.

அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்தல், அதற்கு போதுமான நிதி ஒதுக்கீடுகளைச் செய்தல், நீதிபதிகளை நியமித்தல் மற்றும் பாதுகாப்புப் பிரிவை பலப்படுத்தியதல் ஆகியவற்றை செய்தது எங்களுடைய அரசாங்கமாகும். ஆகவே மக்களுக்கு நீதியை நிலைநாட்டக்கூடிய செயல்பாடுகளை நாங்கள் முன்னெடுப்போம் என்பதை இந்த இடத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

அதனால் கடந்த காலத்தில் இந்த மக்களுடைய மனித எலும்புக்கூடுகளை வைத்து அரசியல் செய்த அரசியல்வாதிகள், எமது நாட்டு மக்கள் மத்தியில் மீண்டும் இனவெறியைத் தூண்டுகின்றனர். அதன் மூலமாக இந்த நாட்டில் ஒரு கிலேச தன்மையை ஏற்படுத்துகின்ற பாவித்தனமான செயல்பாடுகளையும் முன்னெடுக்கின்றார்கள் என்பதையும் மக்கள் மறந்துவிடக் கூடாது.

உங்களுக்குத் தெரியும் 1987ஆம் ஆண்டு, 89ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலே 70,000ற்கும் அதிகமான எங்களுடைய சகாக்கள் கொல்லப்பட்டார்கள். எங்களுடைய ரோஹண விஜேவீர தோழர் உயிரோடு பொரளை கனத்தையில் எரிக்கப்பட்டார்.

நாங்கள் அதற்காக இன்றைக்கு விசாரணைக் கமிஷன் அமைக்கவில்லை. ஏனென்றால் எங்கள் எதிர்பார்ப்பு வேறொன்றுமல்ல, அவர்கள் கண்ட கனவொன்று இருக்கின்றது.

அந்த கனவு என்னவென்றால் இந்த நாட்டிலுள்ள மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதுதான். இந்த நாட்டில் இனியும் இனவாதம், மதவாதம், சுரண்டல், இலஞ்ச ஊழல் மற்றும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது. அதுதான் அவர்களுடைய கனவு. அந்தக் கனவை இன்றைக்கு நாங்கள் நனவாக்கிக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு வடக்கு-கிழக்கில் வாழுகின்ற மக்களுடைய எதிர்பார்ப்புகள், ஆசைகள் மற்றும் அபிலாஷைகள் படிப்படி யாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு நிறைவேற்றப் படுகின்ற பொழுது இந்த நாட்டில் இருக்கின்ற அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அதேபோல் செம்மணிக்கான நீதியையும் நாங்கள் வழங்குவோம் என்றும் உறுதியளிக்கின்றேன்-என்றார். (அ)

### தேரில் எழுந்தருளி...

வலம்வந்தனர். அதனைத் தொடர்ந்து, விநாயகப் பெருமான் முதல் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இரண்டாவது தேரில் வள்ளி, தெய்வானையுடன் முருகப் பெருமான் வலம்வந்த துடன், மூன்றாவது தேரில் நாகபூசணி அம்பாள் எழுந்தருளி பக்தர்களின் வழிபாட்டை ஏற்றுக்கொண்டார்.

திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்கள் பாட்டுக்காவடி, பால்காவடி, தூக்குக்காவடி, கற்பூரச்சட்டி மற்றும் பாற்குடம் உள்ளிட்ட நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி தமது பக்தியை வெளிப்படுத்தினர். தேர் திருவிழாவைக் காணவும், வழிபாடுகளில் பங்கேற்கவும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நயினாதீவில் திரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

### வெளிநாடுகளில் வசித்து...

தொடர்பான யோசனைகளை அமைச்சரவை ஆராய்ந்து வருகிறது.

குறிப்பாக, வெளிநாட்டுத் தூதரகங்களில் நேரில் வாக்களிக்கும் முறை அல்லது டிஜிற்றல் முறையில் வாக்களிக்கும் முறை குறித்த ஆலோசனைகள் அமைச்சரவை உபகுழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயல்முறையில் எவரும் விடுபடாத வகையில் அனைவரையும் உள்ளடக்கிய பொறிமுறையொன்றை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாணசபை தேர்தல்களை நடத்துவது தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்ந்து கலந்துரையாடி வருகிறது.

இருப்பினும், தேர்தலை நடத்துவதற்கான சட்டரீதியான தெளிவின்மை காரணமாக இந்த தேர்தல்களை இந்த ஆண்டு நடத்துவதில் சிக்கல் நிலவுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிக்கையில்-

தெரிவுக்குழுவின் பணிகள் மந்தமாக இருப்பதாகவும், அரசாங்கம் முடிவெடுப்பதற்கு மேலதிக கால அவகாசம் கோருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பழைய விகிதாசார முறைமையின் கீழ் தேர்தல்களை நடத்துமாறும், பெண்களுக்கு மற்றும் இளைஞர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துமாறும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த விடயங்கள் குறித்து ஆராய்வதற்கான அடுத்தகட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு கூட்டம் எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

### அரசில் பழிவாங்கலில்...

பிரச்சினைகளைத் தீர்ப்பதை விடுத்து, முற்றிலும் அரசியல் பழிவாங்கல்களை மட்டுமே இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

கடந்த காலத்தில் அவர்கள் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை.

அரசின் இத்தகைய மக்கள் விரோதப் போக்கினாலும், அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளினாலும் நாட்டு மக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். எனவே, இந்த ஏமாற்று அரசை ஆட்சியில் இருந்து விரை வில் வீட்டுக்கு விரட்டியடிப்பதற்கு மக்கள் தயாராகிவிட்டனர் - என்றார். (அ)

### கடுமையான வெப்ப...

சுமார் 1,000 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டுப் பொதுச் சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜூன் 20ஆம் திகதி தொடங்கிய இந்த உஷ்ண அலை, ஐரோப்பிய வரலாற்றிலேயே மிக மோசமான ஒன்றாகக் கருதப்படும் நிலையில், மின் உற்பத்திப் பாதிப்பு மற்றும் உள்கட்டமைப்புச் சேதங்கள் எனப் பல நாடுகளை நிலைகுலையச் செய்துள்ளது.

தற்போதைய முதற்கட்டப் புள்ளிவிவரங்களின்படி உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியவர்கள் என்றும், முதியோர் இல்லங்கள் மற்றும் வீடுகளில் நிகழ்ந்த மரணங்கள் குறித்த முழுமையான விவரங்கள் திரட்டப்படும் போது இந்த இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தற்போது பிரான்ஸின் பெரும்பாலான பகுதிகளில் உஷ்ணத்தின் வீரியம் சற்றே குறையத் தொடங்கியுள்ள போதிலும், வட கிழக்கு பிராந்தியங்களில் உள்ள சில மாவட்டங்களுக்கு இன்னும் வெப்ப அலை எச்சரிக்கை நீடிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்துப் பேசியுள்ள பிரான்ஸ் சுகாதார அமைச்சர் ஸ்டெபானி ரிஸ்ட், வானிலை மாற்றமடைந்து வெப்பம் தணிந்த பிறகும் கூட, அதன் பக்கவிளைவுகள் மற்றும் உடல்நலப் பாதிப்புகள் சுமார் 10 நாள்களுக்கு நீடிக்கக்கூடும் என்பதால் பொது மக்கள் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

உலகளாவிய சராசரியை விட ஐரோப்பாவில் பருவநிலை மாற்றம் மிக அதிவேகமாக நிகழ்ந்து வருவதே இந்த அதீத கால நிலை மாற்றத்திற்குக் காரணம் என விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர். (அ)

### சபாநாயகருக்கு...

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை வரைவு செய்யும் பொறுப்பு, எதிர்க்கட்சியில் உள்ள சட்டத்தரணிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை சபாநாயகர் மீறியுள்ளார் என்று குற்றம் சாட்டியே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் எட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு பாராளுமன்றத்தின் ஆதரவை வழங்கத் தவறியதன் மூலம், சபாநாயகர் அரசியலமைப்பை மீறியுள்ளார் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பான விவரங்களை எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போதிலும், சபாநாயகர் அதில் கவனம் செலுத்தவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நிலையியற் கட்டளைகளுக்கு இணங்க எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் கையளிக்கப்படும் கடிதங்களை ஏற்பதற்கும் சபாநாயகர் மறுப்புத் தெரிவித்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

### தெல்லிப்பழை ஆதார...

தெல்லிப்பழை வைத்தியசாலை தொடர்பில் ஒரு உறுதியான வாக்குறுதியை அளிக்க விரும்புகிறேன். ஒரு பொறுப்புள்ள அமைச்சு என்ற வகையில், அடுத்த வருடத்திற்குள் இந்த மூன்று மாடிக் கட்டடத்தை நாங்கள் முழுமையாகக் கட்டி முடிப்போம். அதை எம்மால் செய்ய முடியும்.

இந்தக் கட்டட வேலைகள் கடந்த காலங்களில் தாமதமானதற்குக் காரணம், இந்த வருடம் வரை இதற்கான முறையான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் இப்போது அந்த அனுமதி எமக்குக் கிடைத்துள்ளது.

இந்த வருடத்திற்கான பட்ஜெட்டில் இதற்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, கட்டுமானப் பணிகளுக்காக இந்த ஆண்டு சுமார் 70 மில்லியன் ரூபாயை அமைச்சால் ஒதுக்க முடியும்.

எஞ்சிய தொகையை அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்குவோம். அத்துடன், தற்போது புதிய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான முதற்கட்டப் பணிகளையும் ஆரம்பித்துள்ளோம்.

ஆரம்பத்தில் சில மாதங்களுக்கு நீங்கள் தற்போதுள்ள உபகரணங்களைக் கொண்டு பணியாற்ற வேண்டியிருக்கும். ஆனால், புதிய கட்டடம் அமையும் போது உங்களுக்கு புதிய வசதிகளும் புதிய உபகரணங்களும் தேவை என்பதை நான் அறிவேன். எனவே அதற்கான கொள்வனவுப் பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

அத்துடன் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான பணியாளர்களின் எண்ணிக்கைக்கு ஒப்புதல் அளிக்கும் பணியில் 95 வீதம் வரை தற்போது நிறைவடைந்துள்ளது. எனவே, வரும் ஒக்ரோபர் மாதத்திற்கு முன்னதாக இதற்கான அனுமதியைப் பெற்று, புதிய பணியாளர்களை நாம் வேலைக்கு அமர்த்த முடியும்.

ஒட்டுமொத்த சுகாதாரத் துறையிலும் பணியாளர் பற்றாக்குறை மற்றும் சில சிரமங்கள் இருப்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இது வட மாகாணத்தில் மட்டுமல்ல, மத்திய அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகளிலும் இந்த பணியாளர் பற்றாக்குறை உள்ளது.

இறுதியாக நான் கூற விரும்புவது, இந்தக் கட்டடக் கட்டுமானப் பணிகளை இந்த ஆண்டே ஆரம்பித்து, 2027 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முழுமையாக நிறைவு செய்ய முயற்சிப்போம் என்ற உறுதியான வாக்குறுதியை வழங்குகிறேன் - என்றார். (அ)

### செம்மணி கொடூரங்களுக்கு...

நேற்று மாலை உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் செம்மணிச் சந்தியில் அமைந்துள்ள அணையா விளக்குத் திடலில் நேற்று மாலை 4.30 மணிக்கு இந்த நிகழ்வு ஆரம்பமானது.

கடந்த வருடம் இதே நாளில் செம்மணியில் முன்னெடுக்கப்பட்ட "அணையா விளக்கு" போராட்டத்தின் தொடர்ச்சியாக, நீதிக்கான குரலை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த மக்கள் எழுச்சி நேற்று நடத்தப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் எனப் பலதரப்பட்ட மக்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றுத் தங்களின் நீதிக்கான கோரிக்கையை முன்வைத்தனர்.

நீண்டகாலமாக நீதிக்காகக் காத்திருக்கும் மக்கள், குறிப்பாக முன்வைக்கப்பட்டுள்ள ஆறு அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தியும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக் கோரியும் இந்த அமைதி வழிப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

செம்மணி மண்ணில் இடம்பெற்ற கொடூரங்களுக்கு உரிய நீதி கிடைக்கும் வரை போராட்டங்கள் ஓயாது என்பதை வெளிப்படுத்தும் வகையில் இந்த மக்கள் எழுச்சி அமைந்திருந்தது. (அ)

### இலங்கை இளைஞர்...

விமானத்தில் ஏற முயன்ற நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் சின்னப்பு சுபாகரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இலங்கையர் கெம்பேகவுடா விமான நிலையத்தை சென்றடைந்த நிலையில், சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விமானத்திற்கான புறப்பாடு நடைமுறைகளை முடித்துள்ளார்.

எனினும், பின்னர் அதிகாரிகள் நடத்திய விசாரணையில், அவர் சிங்கப்பூர் செல்லும் விமானத்தில் ஏறுவதற்குப் பதிலாக, தனது உண்மையான பயணச்சீட்டை மறைத்துள்ளார்.

பிற்பகல் 2 மணியளவில் முனையம் 2 இல் உள்ள புறப்பாடு குடியேற்றப் பிரிவு வழியாக லண்டன் செல்லும் எயார் இந்தியா ஏ.ஐ.-133 விமானத்தில் ஏற முயன்றமை கண்டறியப்பட்டது.

விசாரணையின் மூலம், சந்தேகநபர் தனது இலங்கை கடவுச்சீட்டை மறைத்து வைத்துவிட்டு, சிவராஜா தக்ஷன் என்ற பெயரிலான போலி கனடா கடவுச்சீட்டை வைத்திருந்தமை தெரியவந்துள்ளது. (அ)

### மட்டு. புதுப்பாலம்...

போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாகன போக்குவரத்துகள் மிக குறைவாக இருந்தமையினால் எவ்வித உயிராபத்துகளும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான சொந்தமான இப்பாலம் கடந்த ஆட்சிக் காலத்தில் புனரமைக்கப்பட்ட நிலையில் இந்த அனர்த்தம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் அதிகளவில் இந்த பாலத்தை பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இந்த பாலம் இடிந்து வீழ்ந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு நகருக்குள் இரண்டு பிரதான பாலங்கள் நுழையும் வகையில் உள்ள நிலையில், அதில் ஒரு பாலம் உடைந்துவீழ்ந்தமையினால், ஒரு பாலத்தை மாத்திரமே பயன்படுத்த வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக பொதுமக்கள் கவலை வெளியிடுகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# பெருந்தொகை போதைப்பொருளுடன் பெண் உட்பட ஐந்து பயணிகள் கைது!

கொழும்பு, ஜூன். 29

சுமார் 29.2 மில்லியன் ரூபாய் சந்தை மதிப்புடைய 'ஹஷிஷ்' மற்றும் 'குஷ்' போதைப்பொருள்களை இலங்கைக்குள் கடத்தி வர முயன்ற பெண் உள்ளிட்ட 5 இலங்கை விமானப் பயணிகளைக் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனைவரும் கேகாலை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் அனைவரும் நேற்று அதிகாலை 04.30 மணியளவில் தாய்லாந்தின் பாங்காக் நகரிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

பொலிஸாரின் சோதனைகளில் இருந்து தப்புவதற்காகச் சந்தேக நபர்கள் ஒரு புதிய தந்திரத்தைக் கையாண்டுள்ளனர். விமான நிலையத்தின் வரி விலக்கு வணிக வளாகத்தின் பெயர் அச்சிடப்பட்ட பொலித்தீன் பைகளுக்குள், 15 கண்ணாடிக் குப்பிகளில் இந்த போதைப்பொருள்களை அடைத்து மறைத்துக் கொண்டு வந்துள்ளனர்.

விமான நிலையத்தின் பிரதான வெளியேறும் முனையத்தைக் கடந்து, போதைப்பொருள்களை நாட்டுக்குள் எடுத்துச் செல்ல முயன்ற போதே இவர்கள் கையும் மெய்யுமாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் ஐவரிடமும் வான்புலனாய்வு மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகச் சந்தேக நபர்களை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பொலிஸார் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். (அ)

# டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்த புகை விசிறல் பயனுள்ள தீர்வு அல்ல!

## நிபுணர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 29

டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் புகை விசிறல் நடவடிக்கை, பயனுள்ள தீர்வு இல்லை என சுகாதார பூச்சியியல் நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த, எ.அந்த சங்கத்தின் தலைவர் நஜித் சுமனசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

புகை விசிறல் நடவடிக்கை மூலம் சுற்றுச்சூழலுக்கு பாரிய பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கொழும்பு மாநகரசபை விசாரணை ஆணைக்குழு பதவிக்காலம் நீடிப்பு!

கொழும்பு, ஜூன். 29

கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்துக் விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பதவிக்கால நீடிப்பை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வழங்கியுள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் 30ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் இன்று திங்கள்கிழமை முடிவடையவிருந்த நிலையில், விசாரணைகளை நிறைவு செய்து இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக இந்த கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொழும்பு மாநகர சபைக்குள் நடைபெற்ற ஊழல், மோசடி, நம்பிக்கை துரோகம் மற்றும் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துதல் போன்ற குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கும் பொறுப்பு இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க, கணக்காளர் ஈ.ஆர்.எம்.எஸ்.எச். ஏக்கநாயக்க மற்றும் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் டி.எஸ். விக்ரமசிங்க ஆகியோர் இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர். (அ)

# அமைதிப் பேச்சை உடன் நிறுத்துவோம்

## அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை

தெஹ்ரான், ஜூன். 29

அமைதிப் பேச்சுவார்த்தையை முழுமையாக நிறுத்துவோம் என அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.


எண்ணெய் கப்பல் மீது ஈரான் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலுக்குப் பதிலடியாக, அமெரிக்க இராணுவ விமானங்கள் ஹோர்மூஸ் நீரிணையில் தாக்குதல் நடத்தியது. அமைதி ஒப்பந்தத்தை மீறியதாக ஈரானை 2ஆவது நாளாக அமெரிக்கா தாக்கியதால் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறியதாவது:- அமெரிக்காவின் அத்துமீறிய தாக்குதல்கள் தொடர்ந்தால், அமைதிப் பேச்சுவார்த்தையை முழுமையாக நிறுத்துவோம்.

கொடுத்த வாக்குறுதிகளுக்கு துளியும் மதிப்பளிக்காது என்பதை இந்த புதிய தாக்குதல்கள் உணர்த்துகின்றது. இதுவே அமெரிக்காவின் இயல்பு.

மத்திய கிழக்கில் அமைதியை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்மூஸ் நீரிணை மீதான ஈரானின் கட்டுப்பாட்டிற்குச் சவால் விடும் எந்தவொரு முயற்சியும் பதற்றத்தை அதிகரிக்கும்.

ஈரான் தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு மாறாக,



எந்தவொரு முயற்சியும் சிக்கலான சூழல்களுக்கே வழிவகுக்கும். இது ஹோர்மூஸ் நீரிணையை மீண்டும் திறப்பதில் தாமதத்தை ஏற்படுத்துவதுடன், கடந்த இரண்டு இரவுகளில் நாம் கண்டது போன்ற பதற்றத்தையும் அதிகரிக்கும் - என்றார். (அ)

# கட்டுநாயக்கவில் "ஹோட்டல்" என்ற பெயரில் சிமெந்து தொழிற்சாலை!

## பிரதேசவாசிகள் போராட்டம்

கொழும்பு, ஜூன். 29

கட்டுநாயக்க விமான நிலையத்தின் 18ஆம் கட்டை சந்திப்புக்கு அருகில், சுற்றுலா ஹோட்டல் ஒன்று அமைக்கப்படுவதாகக் கூறி, சிமெந்து உற்பத்தி மற்றும் பொதியிடும் தொழிற்சாலை ஒன்று நிர்மாணிக்கப்படுவதற்கு எதிராக பிரதேசவாசிகள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.




குறித்த திட்டத்துக்கான கட்டட வரைபடத்திற்கு 2020ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி அன்று மத்திய சுற்றாடல் அதிகார சபையும், அதற்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தை கடந்த 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி அன்று நகர அபிவிருத்தி அதிகார சபையும் வழங்கியுள்ளன.

ஆரம்பத்தில் 6 ஏக்கர் நிலப்பரப்பில், 3,857 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்ட ஒற்றை மாடி கட்டடத்திற்காகவே அனுமதி பெறப்பட்டுள்ளது. எனினும், பின்னர் அது 12,925 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்ட 5 மாடி சிமெந்து உற்பத்தித் தொழிற்சாலைக்கான அனுமதிப் பத்திரமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பு - கட்டுநாயக்க பிரதான வீதியில் இருந்து நீர்கொழும்பு களப்பு வரை இந்த கட்டுமானப் பகுதி விரிவடைந்துள்ளது. இதன் காரணமாக கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, கட்டுநாயக்க விமான நிலையம், அப்பகுதியில் உள்ள சுற்றுலா ஹோட்டல்கள், 3 சர்வதேச பாடசாலைகள், நீர்கொழும்பு களப்பு மற்றும் அதனை நம்பி வாழும் மீனவ சமூகம், விசேட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள லியனகேமுல்ல கண்டல் தாவர காடுகள், கட்டுநாயக்க வர்த்தக வலய பெண் ஊழியர்களின் விடுதிகள் மற்றும் முத்துராஜவெல சுற்றுலா படகு தொழிலாளர்கள் என பல தரப்பினரும் நேரடியாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதிக மக்கள் நடமாட்டமும், சுற்றுலா மற்றும் வணிகத் துறையும் நிறைந்த இப்பகுதியில், சிமெந்து தூசிகளினால் சூழல் மாசடைவது பாரிய சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளை தோற்றுவிக்கும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர். (அ)

# காணிகளை விடுவிக்க வலியுறுத்தி கேப்பாபிலவில் தொடர் போராட்டம்



முல்லைத்தீவு, ஜூன். 29

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட கேப்பாபிலவில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி காணிகளுக்குரிய மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஐந்தாவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கேப்பாபிலவு மக்களின் குறித்த போராட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

குறிப்பாக கேப்பாபிலவில் 55 குடும்பங்களுக்குரிய 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணிகளும், 4 குடும்பங்களுக்குரிய 100 ஏக்கர் மத்திய வகுப்புக் காணிகளும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த பூர்வீகக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தியே காணிகளுக்குரிய மக்களால் தொடர் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org